[1971 டிசம்பர் 28

(2) அறிவிப்புகள்

(அ) அவையுரிமை மீறல் தீர்மானம்பற்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் ஒரு அவையுரிமை மீறல் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் இதுபற்றி சென்னை சென்ட்ரல் ஜெயில் கண்காணிப்பாளரிடம் விளக்கம் கேட்கப் பட்டிருக்கிறது. பதில் வந்தபிறகு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரையில் வைகை வெள்ளத்தால் ஏற்பட்ட விளைவுகளும், பெரு மழையால் தஞ்சை கடற்கரை பகுதிப் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Assembly Rules, of a motion to adjourn the business of the House to discuss the following matter of urgent public importance, viz., death of 20 persons in Madurai, disappearance of a helicopter in Madurai Vaigai floods, destruction of double crops in the coastal areas of Thanjavur district due to heavy rains.

Thiruvalargal A. Subramaniam, K. Kandasami, J. James, M. Surendran, Dr. H. V. Hande and Thirumathi T. N. Anandanayaki have given notices of similar motions . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே—ஆல் 82-இன்கீழ் அறிக்கை வைப்பதற்கு நான் தங்களிடத்திலே அனுமதியைப் பெற்று இருக்கிறேன் :—

ஒத்திவைப்புத் தீர்மானங்களைத் தள்ளிவிட்டு அறிக்கை வைக்கப்படுவது நல்லதல்ல என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்ற உறுப்பினர்களின் பெயர்களைத் தாங்கள் அவைக்கு அறிவித்திருக்கிறீர்கள். சபைக்குத் தேவைப்படுகிற நேரத்தைக் கருதி இந்த அறிக்கையை நான் வைத்துவிடலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் அதைத்தான் சொல்லலாம் என்று இருந்தேன். அதையே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே தங்கமணி அவர்களை மட்டும் அழைத்துப் பேசச் சொல்லலாம் என்று கருதியிருந்தேன். இது பொதுவான விஷயமாக இருப்பதால் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்கள்.